*2*

# வரலாற்றுப் புத்தகம்

*தொடங்குவதற்கு: வரலாற்றுப் புத்தகம் என்ற வகையில், நடபடிகளின் புத்தகம், பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்களைப் போன்றதாகவே உள்ளது; இதில் பெருமளவு எடுத்துரைப்புகள் அடங்கியுள்ளன. நடபடிகளின் புத்தகத்தில் உள்ள ஒரு வசனப்பகுதிக்கு நாம் விளக்கம் அளிக்கையில், "இவ்விடத்தில் தேவன், எஞ்சியுள்ள காலத்திற்கு சபையின் மீது கட்டுவிக்கப் பட்டிருக்கும்படி அவர் நோக்கங்கொண்டுள்ள சிலவற்றை வெளிப்படுத்துகிறாரா?" என்று நாம் கேட்போம்.*

## ஒரு அறிமுகம்

நடபடிகள் புத்தகத்தில் நாம், சபை தொடங்கி வளர்ந்தது எவ்வாறு என்பதைப் பற்றியும், அது எவ்வாறு ஒருங்கமைக்கப் பட்டிருந்தது மற்றும் அதன் உறுப்பினர்கள் எவ்வாறு ஆராதித்தனர் என்பது பற்றியும் கற்றுக்கொள்கிறோம். நடபடிகள் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் பற்றிய முக்கியமான போதனைகளும் அடங்கியுள்ளன. சிலர் இந்தப் புத்தகம், "அப்போஸ்தலர் நடபடிகள்" என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக, "பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்" என்று அழைக்கப்பட வேண்டும் என்று கருத்துக் தெரிவிக்கும் அளவிற்கு, இந்தப் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் முதன்மையான பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளார். நடபடிகள் புத்தகம் நமக்கு இரட்சிப்பின் வழி பற்றிய போதனைகளை அளிக்கிறது. மனந்திரும்புதலுக்கு இது பல உதாரணங்களைக் கொடுக்கையில், சபையானது எவ்வாறு கர்த்தருடைய பிரதான கட்டளையைச் செயல்படுத்த தொடங்கிற்று என்பதைப் பற்றிய வரலாற்றையும் அளிக்கிறது.

### எழுத்தாளர், தேதி, பெற்றுக்கொண்டவர்

நடபடிகள் புத்தகம், கிறிஸ்தவத்தின் தொடக்கம் பற்றிய இரு - தொகுதி எழுத்துப் பணிகளில் இரண்டாவது புத்தகமாக உள்ளது. (லூக்கா சுவிசேஷம் முதல் தொகுதியாகும்.) இது, அனேகமாக ஒரு அரசு அலுவலராக இருந்த தெயோப்பிலு என்பவருக்கு எழுதப்பட்டது (நடபடிகள் 1:1). லூக்கா மற்றும் நடபடிகள் என்ற புத்தகங்கள், இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மனிதரால் மாத்திரம் அல்ல, ஆனால் மிகப்பரவலான மக்களால் வாசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கங்கொண்டிருந்தன என்பதில் சந்தேகம் இல்லை. இது அனேகமாக, ரோமாபுரியில் பவுல், வீட்டுக்காவலில் இரு ஆண்டுகளைச் செலவிட்டபின் (நடபடிகள் 28:30, 31), ஆனால் ரோமாபுரியில் அவர் விசாரிக்கப்பட்டதன் விளைவுகள் அறியப்படுவதற்கு முன்னர், கி.பி. 62ல் எழுதப்பட்டிருக்கலாம்.

லூக்கா சுவிசேஷம் மற்றும் நடபடிகள் ஆகிய புத்தகங்களின் எழுத்தாளர், ஒரு புறஜாதியாரும் வைத்தியருமான லூக்கா ஆவார். நடபடிகள் புத்தகத்தின்

*பிற்பகுதியில் அவர் "நாங்கள்" என்ற சொந்த பதில் பெயர்ச்சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார் என்ற உண்மையில் இருந்து, இவர் பவுலின் பயணத் துணைவராக இருந்து அவருடன் பயணம் செய்தார் என்பது தெளிவாகிறது.*

**நோக்கம்**

*லூக்காவின் கூற்றுப்படி, கிறிஸ்தவம் எவ்வாறு தொடங்கிற்று என்பது பற்றிய சத்தியத்தை, அவரது வாசகர்கள் அறியவேண்டும் என்பதே, இருதொகுதிகளிலான மிகச்சரியான விபரத்தை எழுதுவதற்கான அவரது நோக்கமாக இருந்தது. லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகங்களின் மற்ற நோக்கம் பற்றிய சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன. (1) சிலர், பவுல் ரோமாபுரியில் தம்மை விசாரிக்கும் போது, தம்மைத் தற்காத்துக் கொள்வதற்குப் பயன்படுத்தும்படிக்கு, ஒரு சுருக்கமான, சட்டப்பூர்வமான அறிக்கையை அளிப்பதற்காக இவற்றை எழுதினார் என்று நம்புகின்றனர். (2) சபையின் ஊழியப்பணியை வலியுறுத்துதல், உலகம் முழுவதிலும் சுவிசேஷம் பரவியதன் மூலமாக, இழந்து போன ஆத்துமாக்களை இரட்சித்தல் என்ற இயேசுவின் ஊழியம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதைச் செயல்விளக்கப்படுத்துதல் ஆகியவை அவரது நோக்கங்களாக இருந்திருக்கலாம். நடபடிகள் புத்தகம், பேரரசின் மையமான ரோமாபுரியில் பவுல் இருந்தார் என்பதோடு முடிவடைகிறது. இந்தப் புத்தகம் "எருசலேமில் இருந்து ரோமாபுரிக்கு சுவிசேஷம் பரவியது எவ்வாறு" என்பதைப் பற்றிய வரலாறு என்று நினைக்கப்படலாம். (3) மக்கள் எவ்வாறு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பதைச செயல்விளக்கப்படுத்துதல் என்பது, நடபடிகள் புத்தகத்தின் ஒரு நோக்கமாக இருக்கலாம். (4) தேவனுடைய இராஜ்யத்தில் பங்குவகிக்கும் வாய்ப்பை எல்லா மக்களும் பெற்றுக்கொள்ளும் வரையிலும், சுவிசேஷமானது தடைகள் யாவற்றையும் எவ்வாறு மேற்கொண்டது என்பதை வலியுறுத்துதல் நடபடிகளின் இன்னொரு நோக்கமாக இருக்கலாம். (5) ஒருவேளை நடபடிகள் புத்தகம் பல நோக்கங்களைக் கொண்டிருக்கலாம், அவை யாவும் "கிறிஸ்தவர்களுக்குப் பக்திவிருத்தி ஊட்டுதல் என்ற - பெரிதான, பொதுவான நோக்கத்தின் பகுதிகளாக உள்ளன."*[1]

## பு.ஏ. வரலாற்றுப் புத்தகத்திற்கு விளக்கம் அளித்தல்: நடபடிகள்

*1. விளக்கவுரை (ஒரு வசனப்பகுதி அதனை முதலாக வாசித்தவர்களுக்கு அர்த்தப்பட்டது என்ன) மற்றும் பிரசங்கவுரை (அது இன்றைய நாட்களின் வாசகர்களுக்கு அர்த்தப்படுவது என்ன) ஆகியவற்றிற்கு இடையில் ஒரு தெளிவான வித்தியாசத்தை நாம் ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது.* இவற்றில் இரண்டாவதைச் செய்வதற்காக நாம் முதலாவதைப் புறக்கணித்துவிடக் கூடாது: விளக்கவுரையாளர்கள் என்ற வகையில் ஒரு வசனப்பகுதிக்கு விளக்கவுரை அளிப்பது, அதாவது அவ்வசனப் பகுதி முதலாவதாக அதை வாசித்தவர்களுக்கு எதை அர்த்தப்படுத்தியது என்று கேட்பதே, நமது முதலாவது பணியாக உள்ளது. அதன் பின்புதான் நாம், அது இன்றைய நாட்களில் நமக்கு எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்று கேட்க முடியும்.

*2. நடபடிகள் புத்தகத்தைப்பற்றி அறிதல், அதாவது இப்புத்தகம் ஒரு*

*எடுத்துரைப்பாக உள்ளது என்பதை அறிதல் என்பது, விளக்கவுரை அளித்தலின் நோக்கத்திற்கு மிக முக்கியமான அம்சமாக உள்ளது.* வரலாற்றுப் பூர்வமான எடுத்துரைப்பு என்ற வகையில் இது, பாடல்களை, விசேஷமாக சங்கீதங்களில் இருந்து மேற்கோள்களைக் கொண்டுள்ள ஒரு வரலாறாக உள்ளது. மேலும் இது, அப்போஸ்தலர்கள், சுவிசேஷ ஊழியர்கள் மற்றும் பிறரால் பேசப்பட்ட பேச்சுக்கள் பலவற்றைத் திரும்பக்கூறும் உரைநடையையும் உள்ளடக்கி இருக்கிறது. இத்துடன் கூடுதலாக, இது இரட்சிக்கப்பட செய்யவேண்டியது என்ன என்பது உள்ளடங்க, "பிரமாணத்தை" - அல்லது குறைந்தபட்சம் அதன் நிபந்தனைகளை - பிரதிபலிக்கிறது; ஆனால் இது இன்னமும் ஒரு எடுத்துரைப்பாகவே உள்ளது. இந்தப் புத்தகத்தில் இருந்து எந்த ஒரு வசனப்பகுதியையும் வரலாற்றை, புத்தகம் முழுவதற்கும் மற்றும் ஆர்வத்திற்குரிய வசனப்பகுதி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் புரிந்துகொள்ள வேண்டும்.

நடபடிகள் புத்தகம் ஒரு எடுத்துரைப்பாக இருப்பதால், நாம் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் வசனப்பகுதியில் கூறப்பட்டுள்ள வரலாற்றை நாம் பகுத்து ஆராய வேண்டும். அதன் திட்டம் என்னவாக உள்ளது? பிரதான பாத்திரங்கள் யார்? வேதாகம எடுத்துரைப்புகள் யாவற்றிலும் தேவனே பிரதான பாத்திரமாக இருக்கிறார் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்பது உண்மையே. பிதாவாகிய தேவனும், இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் ஆகிய யாவரும், நடபடிகளின் எடுத்துரைப்பை ஏற்படுத்தும் வரலாறுகளில் ஈடுபட்டுள்ளனர். அந்த வரலாற்றில் என்ன நடக்கிறது? யார் எதை யாருக்கு எப்போது மற்றும் எங்கு மற்றும் ஏன் செய்தனர்? படிக்கப்படும் நிகழ்வின் காரணங்களும் விளைவுகளும் என்ன? இந்தக் குறிப்பிட்ட நிகழ்வு புத்தகம் முழுவதற்குமான திட்டத்துடன் - இதன் ஆய்வுக்கருத்து மற்றும் இதன் முழுமையான நோக்கம் ஆகியவற்றுடன் - எவ்வாறு தொடர்புபடுகிறது என்றும் நாம் கேட்க வேண்டும்.

3. *விளக்கம் தரப்படும் வசனப் பகுதியின் குறிப்பிட்ட காட்சி அமைவைப் புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும்.* நடபடிகள் 13ல் அவிசுவாசிகளுக்குப் பவுல் ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, அவர் பழைய ஏற்பாட்டின் வரலாற்றை வலியுறுத்தினார், ஆனால் நடபடிகள் 17ல் அவர் பழைய ஏற்பாட்டை மேற்கோள் காண்பிக்காமலேயே அவிசுவாசிகளுக்குப் பிரசங்கித்தார். அங்கு இந்த வேறுபாடு இருந்தது ஏன்? நடபடிகள் 13ல் அவர் பிசீதியாவின் அந்நியோகியாவில் ஜெப ஆலயத்தில் வேதவாக்கியங்களை விசுவாசித்த யூதர்களிடம் பேசினார். நடபடிகள் 17ல் அவர், யூதத்துவ வேதவாக்கியங்களை அறிந்திராத அல்லது விசுவாசியாத அத்தேனே பட்டணத்தில் இருந்த கிரேக்கர்களுக்குப் பிரசங்கித்தார். காட்சி அமைவை அறிதல், இந்த இரு பிரசங்கங்களுக்கும் இடையிலிருந்த வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது; பவுல் தமது செய்தியைக் கேட்பவர்களுக்கு ஏற்ப அதைத் தழுவியமைத்தார், அவ்வளவே.

4. *முதல் நூற்றாண்டின் காட்சி அமைவின் நிபந்தனைகளில் வரலாற்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.* எடுத்துக்காட்டாக நாம், முதல் நூற்றாண்டில் யூதர்களைப் புறஜாதியாரிடம் இருந்து பிரித்த மாபெரும் பிரிவினையைப் புரிந்துகொள்ளாத வரையில், இந்தப் புத்தகத்தின் பெரும்பகுதியைப் புரிந்து கொள்ள முடியாது. ரோமப்பேரரசு அந்தக் காலத்தின் உலகத்தை ஆண்டது

பற்றிய அறிவு இல்லாத நிலையில், நடபடிகள் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள, பவுல் இராயனுக்கு அபயமிட்டது மற்றும் அவர் ரோமாபுரிக்குப் பயணப்பட்டது ஆகியவை புரிந்துகொள்ளப்பட முடியாது.

*5. நடபடிகள் புத்தகத்திற்கு விளக்கம் அளித்தலுக்கு, எடுத்துரைப்பில் அடங்கிய மக்கள் மற்றும் அந்த எடுத்துரைப்பை முதலாவது வாசித்தவர்கள் ஆகியோருக்கு இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துதல் நமக்குத் தேவைப்படுகிறது.* நடபடிகள் புத்தகத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் இரு குழுக்கள் உள்ளடங்கின: (1) அந்த வரலாற்றில் இருந்த மக்கள், அந்த நிகழ்வு நடந்தபோது அங்கிருந்த மக்கள், மற்றும் (2) இதை லூக்கா யாருக்கு எழுதினாரோ அவர்கள், அதாவது அவரது எழுத்தை முதலாவதாக வாசித்தவர்கள். நடபடிகள் 2ல் பதிவு செய்யப்பட்டபடி, பெந்தெகொஸ்தே நாளைப் பொறுத்தமட்டில், நிகழ்வுகள் மிகச்சரியாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்போஸ்தலர்கள் அங்கிருந்தனர்; அவர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கினார்; ஒரு மக்கள் கூட்டம் கூடிற்று; பேதுரு பிரசங்கித்தார்; இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது, அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பேதுரு பதில் அளித்தார் (நடபடிகள் 2:38). இந்த விஷயங்கள், லூக்கா தெரிவித்தபடியே நடைபெற்றன. இருப்பினும் நடபடிகள் 2க்கு நாம் விளக்கம் அளிக்கும்போது, "இந்த விபரத்தில் இருந்து, விசேஷமாக இந்த நிகழ்வு இப்புத்தகத்தின் எஞ்சிய பகுதியில் கூறப்பட்ட வரலாற்றுடன் தொடர்புபடும் வகையில், இதில் இருந்து லூக்காவின் வாசகர்கள் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று லூக்கா விரும்பினார்?" என்றும் நாம் கேட்பது அவசியம். *இந்த வசனப்பகுதியில் இருந்து இதன் முதல் வாசகர்கள் கற்றுக்கொண்டது என்ன என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.* அவர்கள் கற்றது என்ன அல்லது அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது என்ன என்பதே வசனப்பகுதியின் உண்மையான அர்த்தமாக உள்ளது.

*6. இந்தப் புத்தகம் முழுமையின் நோக்கம் அல்லது ஆய்வுக்கருத்து மற்றும் லூக்கா மற்றும் நடபடிகள் என்ற இருதொகுதி எழுத்துக்களின் நோக்கம் அல்லது ஆய்வுக்கருத்து ஆகியவற்றின் வெளிச்சத்தில், நடபடிகள் புத்தகத்தின் தனித்தனி நிகழ்வுகளை நாம் புரிந்து கொள்வது அவசியம்.* லூக்கா, தொடக்ககாலக் கிறிஸ்தவத்தின் வரலாற்றை எடுத்துரைத்தார், ஆனால் தேர்ந்துகொள்ளப்பட்ட விஷயங்களை மாத்திரம் பதிவு செய்து அவர் இவ்வாறு எடுத்துரைத்தார். சபையின் தொடக்ககால வரலாற்றில் இருந்த ஒவ்வொரு விபரத்தையும் அவர் உள்ளடக்கவில்லை. நாம் விளக்கம் அளிக்கையில், பின்வருவன போன்ற கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: "இந்தப் புத்தகத்தின் இவ்விபரங்களுடன் இந்த வரலாற்றை (பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு) லூக்கா உள்ளடக்கியது ஏன்?"; "இவ்வசனப் பகுதி இப்புத்தகத்தின் நோக்கத்துடன் எவ்வாறு தொடர்புபடுகிறது?"; "இது இப்புத்தகத்தின் வரைகுறிப்புடன் எவ்வாறு பொருந்துகிறது?"; "இந்த எடுத்துரைப்பின் நோக்கம் என்ன?"

"ஏன்?" என்பது ஒரு எடுத்துரைப்பைப் பற்றிக் கேட்க வேண்டிய மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. இந்தக் கேள்விக்கு நிச்சயமான வகையுடன் பதில் அளிக்க முடியாதபோதிலும், இது இன்னமும் கேட்கப்பட வேண்டியதாக உள்ளது. நடபடிகள் புத்தகத்தில் மனமாற்ற நிகழ்வுகள் உள்ளடக்கப்பட்டது ஏன் என்று கேட்டால் நாம், "இரட்சிக்கப்படுவது எவ்வாறு என்று மக்கள்

அறிந்து கொள்வதற்காக" என்று மாத்திரம் பதில் அளிக்கச் சாயலாம். இந்த எடுத்துரைப்புகளை உள்ளடக்கும்படி லூக்காவைப் பரிசுத்த ஆவியானவர் ஏவியதற்கு அது ஒருபகுதி காரணமாக இருந்திருக்கலாம். இருப்பினும், லூக்கா சுவிசேஷப் புத்தகமும் நடபடிகள் புத்தகமும் கிறிஸ்தவர்களுக்கு - இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அறிந்திருந்த மற்றும் சுவிசேஷத்திற்கு ஏற்கெனவே கீழ்ப்படிந்திருந்த - கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டன என்ற உண்மையைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, நாம் வேறுவிதமாக முடிவு செய்தாக வேண்டும். அனேகமாக, மனமாற்றங்கள் பலவற்றின் விபரங்களைக் கொடுத்தல் என்பது லூக்காவின் முதன்மை நோக்கமாக இல்லாதிருக்கலாம், அல்லது இந்த நிகழ்வுகளைப் பற்றி வாசிக்கும் மக்களுக்குப் போதிப்பதை லூக்கா நோக்கங்கொள்ளாது இருக்கலாம்.

லூக்கா இன்னும் பல மனமாற்றங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி இருக்க முடியும் என்பதை உணர்ந்து அறிந்த நிலையில், "மனமாற்றத்தின் குறிப்பிட்ட இவ்வரலாறுகளை லூக்கா உள்ளடக்கியது ஏன்?" என்று நாம் கேட்கலாம். நடபடிகள் புத்தகமானது, (1) பெந்தெகொஸ்தே நாளன்று இருந்த மக்கள் (2:36-41), (2) சமாரியர்கள் (8:12), (3) எத்தியோப்பிய மந்திரி (8:26-39), (4) சவுல் (9:1-18; 22:6-16; 26:12-20), (5) கொர்னேலியு (10:1-48), (6) லீதியாள் (16:13-15), (7) பிலிப்பியச் சிறையதிகாரி (16:25-34) மற்றும் (8) கொரிந்தியர்கள் (18:8) ஆகியோரின் மனமாற்றங்கள் பற்றிக் கூறுகிறது. இந்த மக்களின் மனமாற்ற வரலாறுகள் பொதுவில் கொண்டுள்ள பண்புகள் பற்றிக் கூறுகிறது. இந்த மக்களின் மனமாற்ற வரலாறுகள் பொதுவில் கொண்டுள்ள பண்புகள் யாவை?

இவற்றில் அடங்கியுள்ள மக்களில் நாம் காணும் பல்வகைத்தன்மைதான் என்ன! எருசலேமில் யூதர்கள் இருந்தனர்; சமாரியர்கள் யூதர்களால் வெறுக்கப்பட்டனர்; ஒருவர் எத்தியோப்பிய மந்திரி, அவர் வேறொரு நாடு மற்றும் மாறுபட்ட இனக்குழுவை அனேகமாக யூதமார்க்கத்து அமைந்தவரான ஒரு யூதராக இருந்தார்; சவுல் அல்லது பவுல்; புறஜாதியாரான கொர்னேலியு; புறஜாதிப் பெண்ணான லீதியாள்; புறஜாதியாரான அனேகமாக ஒரு ரோமானியரான பிலிப்பிய சிறையதிகாரி; மற்றும் கிரேக்க நாட்டின் புகழ்பெற்ற நகரமான கொரிந்து பட்டணத்தின் குடிமக்கள் ஆகியோர்.

குறிப்பிட்ட இந்த மனமாற்றங்களின் விபரங்களை உள்ளடக்குதல் என்பது, இராஜ்யம் எல்லாருக்கும் - சமூகத்தினால், குறிப்பாக யூத சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டு தள்ளப்பட்டு உள்ளவர்களுக்கும்கூட - திறவுண்டு இருக்கிறது என்பதைச் செயல்விளக்கப்படுத்துதலுக்கு லூக்காவின் வழியாக இருக்கலாம். "ஏன்?" என்று கேட்பதானது, லூக்கா எழுதியது என்ன, அதை அவர் எழுதியது ஏன் மற்றும் அவரது செய்தியை அவரது முதல் வாசகர்கள் எவ்வாறு புரிந்துகொண்டனர் என்பவற்றை பற்றி நாம் இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவலாம்.

*7. ஒரு வசனப்பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் ஆராய்ந்த பின்பு, அதன் முதல் வாசகர்களுக்கு அது அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நாம் பகுத்து ஆய்ந்த பின்பு, அது இன்றைய நாட்களில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க முடியும்.* நடபடிகள் புத்தகம், உபதேச மற்றும் நடைமுறைப் பயன்பாடுகளுக்கு வளமான ஆதாரமூலமாக உள்ளது. பிரசங்கிப்பது எவ்வாறு அல்லது இரட்சிக்கப்பட

மக்கள் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி நாம் அறிய வேண்டும் என்றால், அவற்றைக் காண்பதற்கு நடபடிகள் புத்தகம் ஒரு நல்ல இடமாகும். நடபடிகள் புத்தகத்தில் உள்ள ஆற்றல் மிக்க, ஊழியம் செய்கிற, ஊழியத்திற்கும் அனுப்புகிற சபையின் வகையாவதற்கு, அப்படிப்பட்ட சபையை நடபடிகளின் புத்தகத்தில் கிறிஸ்தவர்கள் கண்ணோக்க முடியும்.

## ஒரு வசனப்பகுதிக்கு விளக்கம் அளித்தலுக்கான உதாரணம் - நடபடிகள் 21:17-26

நடபடிகள் புத்தகத்தின் வசனப்பகுதி ஒன்றிற்கு எவ்வாறு விளக்கம் அளிப்பது என்பதற்குச் சுருக்கமான ஒரு உதாரணம் என்ற வகையில் நாம் நடபடிகள் 21:17-26 வசனப் பகுதியைக் கண்ணோக்குவோமாக, எருசலேமில் இருந்த யாக்கோபு மற்றும் அங்கிருந்த பிற மூப்பர்களைப் பவுல் சந்தித்தார், அப்போது புறஜாதியார்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டது பற்றி அவர்கள் அகம் மகிழ்ந்தனர். இருப்பினும் நாம் பின்பு இவ்வாறு வாசிக்கிறோம்,

> பிரார்த்தனை பண்ணிக்கொண்டவர்களாகிய நாலுபேர் எங்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்துகொண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவுசெய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள். விசுவாசிகளான புறஜாதியார் இப்படிப் பட்டவைகளைக் கைக்கொள்ளாமல், விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள். அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்புச் செய்து கொண்டு தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் வேண்டிய பலிசெலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான் (21:23ஆ-26).

எடுத்துரைப்பின் இவ்வசனப் பகுதியில், பவுல் ஒரு பொருத்தனை செய்துகொண்டு, எருசலேம் தேவாலயத்தில் நடைபெற்ற யூதத்துவச் சடங்கு ஒன்றில் பங்கேற்றார். இது, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று போதித்தவர்களுடன் மற்றும் விசேஷமாக, புறஜாதியார் கிறிஸ்தவராவதற்கு விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று போதித்தவர்களுடன் பவுல் பலமாக எதிர்த்து நின்றது பற்றிக் கூறும் நடபடிகள் 15ம் அதிகாரத்தில் அல்லது கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படுகிறபடி பவுலின் கொள்கை மற்றும் நடக்கை ஆகியவற்றிற்கு முரண்படுகிறதா? இல்லை. பவுல் தமது சொந்தக் கொள்கையைச் சீர்பொருத்தமாகப் பின்பற்றினார். புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு யூதத்துவப் பழக்க வழக்கங்கள் தேவைப்பட்டன என்று போதிக்கப்படாது இருந்தால், “நான் எல்லாருக்கும் எல்லாமானேன்” என்பது பவுலின் எண்ணப்போக்காக இருந்தது (1 கொரிந்தியர்

9:22). ஆகவே தேவாலயத்தில் ஒரு பொருத்தனையை ஏறெடுப்பது, யூதர்கள் மத்தியில் அவரது ஊழியத்தை முன்னேற்றம் அடையச் செய்யும் என்றால், அவர் அதை மகிழ்வுடன் செய்வார்.

"ஆனால் இது இரத்தப்பலி செலுத்துதலை உள்ளடக்கியது, மற்றும் இயேசுவின் பலியானது மிருகங்கள் பலிசெலுத்தப்படுதலை நீக்கிப்போட்டதே" என்று கூறி சிலர் இந்த நிலைப்பாட்டை மறுத்துரைக்கலாம். அந்த மறுப்புரைக்கு இரு வழிகளில் பதில் அளிக்க முடியும். முதலாவது, இங்கு இரத்தப்பலி ஒன்று செலுத்தப்பட்டது என்பது நிச்சயமானதாக இருப்பதில்லை; மற்றும் இரண்டாவது, இரத்தப் பலி என்பது பாவங்களுக்கான பலியாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. சிலவேளைகளில், பாவங்களை நீக்கிப்போடுவதற்காக அல்ல, ஆனால் தேவனைக் கனப்படுத்தும் ஒரு வழியாகவும் அதைச் செலுத்துபவருக்கு சந்தோஷத்தைக் கொண்டுவருவதற்காகவும் ஒரு மிருகம் பலி செலுத்தப்பட்டது. முதல் நூற்றாண்டில் சபையின் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளுதலில் இருந்தும், பழைய ஏற்பாடு மற்றும் பலிகள் பற்றிய அதன் போதனைகளைப் புரிந்துகொள்ளுதலில் இருந்தும், யூதர்கள் மற்றும் புறஜாதி யார்களைக் கையாளுவதற்குப் பவுலினால் உரைக்கப்பட்ட கொள்கையைப் புரிந்துகொள்ளுதலில் இருந்தும் வசனத்திற்கு இப்படிப்பட்ட ஒரு விளக்கம் அளித்தல் வருகிறது.

இவ்வசனப் பகுதியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? ஒரு எடுத்துரைப்பு மற்றும் வரலாற்றின் ஒருபகுதி என்ற வகையில் இது, பவுல் எப்போது மற்றும் ஏன் கைதுசெய்யப்பட்டார் என்று கூறுகிறது: அவர் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், இவ்வசனப்பகுதியை விவரிக்கும் வேளையில் தேவாலயத்தில் அவர் கைதுசெய்யப்பட்டார். நடபடிகள் புத்தகத்தின் எஞ்சிய பகுதி முழுவதிலும் அவர் மீண்டும் ஒருக்காலும் விடுதலையான மனிதராக இருக்கவில்லை. பவுல், தமது யூத சகோதரர்களைத் திருப்திபடுத்தவும் சமாதானத்தைப் பராமரிக்கவும் எந்த அளவுக்குச் செல் வார் என்பதையும் இவ்வசனப்பகுதி காண்பிக்கிறது. அவர், "யூதருக்கு யூதனைப்போலவுமானேன்" (1 கொரிந்தியர் 9:20அ) என்று கூறியபோது அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை இது விவரிக்கிறது. இந்த வசனப்பகுதியை நடைமுறைப்படுத்தும்போது, நாம் பவுலைப்போல் - "[நாம்] எப்படியாகிலும், சிலரை இரட்சிக்கும்படிக்கு, நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்று சொல்ல விருப்பமுள்ளவர்களாய் இருக்கும்படி அறைகூவல் விடப்படுகிறோம் (1 கொரிந்தியர் 9:22இ).

## முடிவுரை

நடபடிகளுக்கு விளக்கம் அளித்தல் ஒரு கேள்வியை முன்வைக்கிறது: இந்தப் புத்தகத்தில் நாம் வாசிக்கும் சபையின் உதாரணத்தைப் பின்பற்ற நாம் எந்த அளவுக்குக் கட்டுவிக்கப்படுகிறோம்?

*எடுத்துரைப்பு என்பது பிரமாணமாக இருப்பதில்லை என்ற உண்மையை நாம் அடிக்கோடிட வேண்டும்.* பழைய ஏற்பாட்டு எடுத்துரைப்புகள், பிரமாணத்தை விவரிக்கப் பயன்படுத்தப்படக் கூடும் அல்லது குறிப்பிட்ட சம்பவங்களில் குறிப்பிட்ட பிரமாணங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நிலைநாட்டும் என்றாலும்,

அந்த எடுத்துரைப்புகள் பிரமாணம் அல்ல, அவ்வாறே நடபடிகள் புத்தகத்திலும் தேவன் அந்த எடுத்துரைப்புகளைப் பயன்படுத்தி இருக்கலாம். இருப்பினும், *நடபடிகளில் சில விஷயங்கள் நடைபெற்றன என்ற உண்மையானது - அது தேவனுடைய அங்கீகாரத்துடன் (அல்லது அவரது அங்கீகாரமில்லாமல்) நடைபெற்றிருந்தாலும் அதை பிரமாணமாக்குவது இல்லை!*

அதே வேளையில், புதிய ஏற்பாட்டின் மூலமாகத் தேவன், கிறிஸ்தவ யுகம் முழுவதிலும் சபையானது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டுதல்களையும், கொள்கைகளையும் அல்லது ஒரு "முன்மாதிரியையும்" அளிக்க நோக்கங்கொண்டார் என்று நாம் நம்புகிறோம், *புதிய ஏற்பாட்டின் எஞ்சிய புத்தகங்களோடுகூட, நடபடிகள் புத்தகமும், தேவன் தமது சபைக்குக் கொண்டுள்ள வடிவமைப்பைக் கண்டுபிடிப்பதில் நமக்கு உதவ முடியும்.*

ஆகையால் நாம், நடபடிகள் புத்தகத்தை (மற்றும் நிருபங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியை) வாசிக்கும்போது, "இன்றைய நாட்களின் சபையைக் கட்டுப்படுத்துவதற்கு நோக்கங்கொண்டுள்ள சிலவற்றைத் தேவன் இங்கு வெளிப்படுத்துகிறாரா?" என்று கேட்க வேண்டும்.

நடபடிகள் புத்தகத்தில் உள்ள கிறிஸ்தவர்களின் அதே நிலைப்பாட்டில் நம்மை நாம் கண்டால், ஏவுதல் பெற்ற மனிதர்களால், அதில் அவர்களுக்கு தரப்பட்டுள்ள அதே அறிவுறுத்துதல்கள் நமக்கும் நடைமுறைப்படும். இன்றைய நாட்களில் மக்கள், கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால், பெந்தெகொஸ்தே நாளில் மக்களுக்குப் பேதுரு அளித்த கட்டளை இன்னமும் நடைமுறைக்கு உரியதாக உள்ளது: "நீங்கள் மனந்திரும்பி, … பாவமன்னிப்புக்கென்று … ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (நடபடிகள் 2:38).

---

குறிப்புகள்

[1]D. A. Carson, Douglas J. Moo, and Leon Morris, *An Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1992), 198.